ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

வெளியிடுபவர் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்
திகதி 2021 யூலை 02

# இலங்கையின் வெளிநாட்டுச் செலாவணி நிலையினைப் பேணுவதற்கு வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட புதிய கட்டளை

நாட்டின் செலாவணி வீதம் மீதான அழுத்தத்தினைக் குறைத்து வெளிநாட்டு நாணய ஒதுக்கு நிலையினைப் பாதுகாப்பதன் மூலம் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டிற்கு உதவியளித்து பேணும் நோக்குடன், இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையின் பரிந்துரையுடனும் அமைச்சரவையின் ஒப்புதலுடனும் கௌரவ நிதியமைச்சர், 2021 யூலை 02ஆம் திகதியிடப்பட்ட 2234/49 அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தல்களில் வெளியிடப்பட்ட 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 22ஆம் பிரிவின் கீழ் கட்டளையொன்றினை வழங்கியுள்ளார்.

அதற்கமைய, வெளிமுகப் பணவனுப்பல்கள் மீது பின்வரும் இடைநிறுத்தல்கள்/ கட்டுப்பாடுகள் 2021 யூலை 02ஆம் திகதியிலிருந்து தொடங்குகின்ற ஆறு (06) மாதங்களுக்கு நடைமுறையிலிருக்கும்.

i. உடனடிக் குடும்ப உறுப்பினரொருவரிடமிருந்து (அதாவது புலம்பெயர்ந்தவரின் பெற்றோர், பெற்றோரின் பெற்றோர், உடன் பிறந்தவர்கள் மற்றும் துணை) புலம்பெயர்ந்த ஒருவர் மூலம் பண அன்பளிப்புக்களாகப் பெறப்பட்ட நிதியங்களிலிருந்து புலம்பெயர் அனுமதிக்கப்பட்ட தொகையின் கீழ் நிதியங்களை சொந்த நாட்டுக்கு அனுப்புவதை இடைநிறுத்தல்.

ii. பொதுவான அனுமதியின் கீழ் ஏற்கனவே புலம்பெயர் அனுமதிக்கப்பட்ட தொகையினைக் கோரியுள்ள புலம்பெயர்ந்தவர்களினால் மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாய்க் கணக்குகளூடாக புலம்பெயர் அனுமதிக்கப்பட்ட தொகையின் கீழ் நிதியங்களைச் சொந்த நாட்டிற்குத் திருப்பியனுப்புவதை உயர்ந்தபட்சம் ஐ.அ.டொலர் 10,000 அல்லது ஏதேனும் வேறு பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகை வரை மட்டுப்படுத்தல்.

iii. பொதுவான அனுமதியின் கீழ் முதற் தடவையாக புலம்பெயர் அனுமதிக்கப்பட்ட தொகையினைக் கோருகின்ற புலம்பெயர்ந்தவர்களுக்கான தகைமையுடைய புலம்பெயர் அனுமதிக்கப்பட்ட தொகையினை உயர்ந்தபட்சம் ஐ.அ.டொலர் 30,000 அல்லது ஏதேனும் வேறு பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகை வரை மட்டுப்படுத்தல்.

iv. பொதுவான அனுமதியின் கீழ் மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாய்க் கணக்குகள் அல்லது புலம்பெயர்ந்தவர்களின் பணவனுப்பத்தக்க வருமானக் கணக்குகள் ஊடாக புலம்பெயர்ந்தவர்கள் மூலம் ஏதேனும் நடப்பு வருமானத்தினை அல்லது திரண்ட நடப்பு வருமானத்தினை (ஊழிய சேமலாப நிதியம், ஊழிய நம்பிக்கைப் பொறுப்பு நிதியம், பணிக்கொடை மற்றும் ஓய்வூதியங்கள் அல்லது ஏதேனும் ஓய்வு நலன்கள் அடங்லாக) சொந்த நாட்டிற்கு அனுப்புவதை உயர்ந்தபட்சம் ஐ.அ.டொலர் 30,000 அல்லது ஏதேனும் வேறு பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகை வரை மட்டுப்படுத்தல்.

v. இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியில் வதிகின்ற அத்துடன் எதிர்காலத் திகதியொன்றில் அந்நாட்டில் நிரந்தர வதிவிட அந்தஸ்தினை அல்லது குடியுரிமையினைப் பெற்றுக்கொள்வதற்கு தனிப்பட்டவர் உரிமை பெறுகின்ற வீசா வகையொன்றினுள் வருகின்ற வேறொரு நாடொன்றில் தற்காலிக வதிவிட வீசாவைப் பெற்றுக்கொண்டுள்ள எவரேனும் தனிப்பட்ட இலங்கையருக்கான வெளிமுகப் பணவனுப்பல்களை அல்லது வெளிநாட்டுச் செலாவணி வழங்கலை ஆளொருவருக்கு உயர்ந்தபட்சம் ஐ.அ.டொலர் 20,000 அல்லது ஏதேனும் வேறு பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகை வரை மட்டுப்படுத்தல்.

vi. வேறொரு நாட்டின் தற்காலிக வீசாவின் கீழ் இலங்கையிலிருந்து செல்வதற்கு உத்தேசிக்கின்ற இலங்கையில் வதிகின்ற எவரேனும் ஆளுக்கான வெளிநாட்டுச் செலாவணி வழங்கலை உயர்ந்தபட்சம் ஐ.அ.டொலர் 10,000 அல்லது ஏதேனும் வேறு பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகை வரை மட்டுப்படுத்தல்.

vii. 2021 பெப்புருவரி 03ஆம் திகதியிடப்பட்ட 2213/34ஆம் இலக்க *அதிவிசேட வர்த்தமான பத்திரிகை* அறிவித்தல்களில் வெளியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க ஒழுங்குவிதிகளின் அட்டவணையில் வழங்கப்பட்ட பொதுவான அனுமதியின் கீழ் இலங்கையில் வதிகின்ற ஆட்களினால் வெளிநாடுகளில் முதலீடுகளை மேற்கொள்கின்ற நோக்கத்திற்காக பின்வருவன நீங்கலாக, வெளிமுக முதலீட்டுக் கணக்குகள் ஊடாக கொடுப்பனவுகளை மேற்கொள்வதை இடைநிறுத்தல்:

(அ) வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் இலங்கைக்கு வெளியில் வதிகின்ற ஆளொருவரிடமிருந்து முதலீட்டாளரினால் பெற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடனொன்றிலிருந்து நிதியளிக்கப்படவுள்ள முதலீடுகள், அல்லது

(ஆ) சட்டத்தின் அல்லது நீக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கி முதலீடினைப் பெறுபவரின் நாட்டிலுள்ள கம்பனியொன்றில் அல்லது கிளை அலுவலகமொன்றில் ஏற்கனவே செய்யப்பட்ட முதலீடு மீது பிரயோகிக்கப்படக்கூடிய அந்நாட்டின் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்படுத்தலினை நிறைவுசெய்வதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய மேலதிக முதலீடொன்று, அல்லது

(இ) முதலீட்டினைப் பெறுபவரின் தொழிற்படு மூலதனத் தேவைப்பாடுகள் நோக்கத்திற்காக, உயர்ந்தபட்சம் ஐ.அ.டொலர் 15,000 அல்லது ஏதேனும் வேறு பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகை வரை சட்டத்தின் அல்லது நீக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்குட்பட்டு வெளிநாடுகளில் கூட்டிணைக்கப்பட்ட/ தாபிக்கப்பட்ட ஏற்கனவே தாபிக்கப்பட்ட துணைநிறுவனங்களில் அல்லது கிளை அலுவலகங்களில் தகைமையுடைய வதியும் கம்பனிகளினால் மேற்கொள்ளப்படவுள்ள நிதியங்களின் மேலதிக முதலீடு/ மேலதிக உட்செலுத்தல் (ஏற்புடையவாறு), அல்லது

(ஈ) தகைமையுடைய வதியும் கம்பனிகளால் சட்டத்தின் அல்லது நீக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்குட்பட்டு வெளிநாட்டில் ஏற்கனவே தாபிக்கப்பட்ட தொடர்புபடுத்தல், சந்தைப்படுத்தல், முகவராண்மை, கருத்திட்டம், பிரதிநிதி அல்லது வேறு ஏதேனும் அதனையொத்த அலுவலகங்களின் பராமரிப்பு நோக்கத்திற்காக உயர்ந்தபட்ச ஐ.அ.டொலர் 30,000 அல்லது ஏதேனும் வேறு பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகை வரையான பணவனுப்பல்கள்,

ஆயின், வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் தலைவர் அத்தகைய தேவைப்படுத்தலினை நிறைவுசெய்தல் பற்றி திருப்தியடைய வேண்டும்.

viii. இக்கட்டளை செயற்பாட்டிலுள்ள காலத்தின் போது, இலங்கையில் வதிகின்ற ஆளொருவரின் மூலம் வைத்திருக்கப்படுகின்ற வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகள் அல்லது/ அத்துடன் தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குகளூடாக மூலதனக் கொடுக்கல்வாங்கல் மீதான வெளிமுகப் பணவனுப்பல்களை உயர்ந்தபட்சம் ஐ.அ.டொலர் 20,000 அல்லது ஏதேனும் வேறு பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகை வரை மட்டுப்படுத்தல்.

ix. 2021 இன் 1 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி ஒழுங்குவிதிகளின் பொதுவான அனுமதியின் கீழ் குறித்துரைக்கப்பட்ட வரையறைகளை விஞ்சுகின்ற முதலீடுகளுக்காக விடயத்திற்கு விடயம் என்ற அடிப்படையில் வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 7(10) ஆம் பிரிவின் நியதிகளின் பிரகாரம் அனுமதி வழங்குவதற்கு நாணயச் சபை அதிகாரத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும், ஆயின்,

(அ) முன்மொழியப்பட்ட முதலீடானது வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆளொருவரிடமிருந்து முதலீட்டாளரினால் பெற்றுக் கொள்ளப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடன் ஒன்றிலிருந்து நிதியளிக்கப்படுவதாக இருத்தல், அல்லது

(ஆ) முன்மொழியப்பட்ட முதலீடானது சட்டத்தின் அல்லது நீக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க முதலீட்டினைப் பெறுபவரின் நாட்டிலுள்ள கம்பனியொன்றில் அல்லது கிளை அலுவலகமொன்றில் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட முதலீடு மீது ஏற்புடைய அந்நாட்டின் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாட்டினை நிறைவுசெய்வதற்கு மேற்கொள்ளப்பட வேண்டியதாக இருத்தல்.

மேலதிகத் தகவல்களை **www.dfe.lk** என்ற இணையத்தளத்தினுள் பிரவேசிப்பதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.